# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

CC.No.36-2023 L.W.3 P.W.3

| Name | திரு.குணசேகரன் | Father / Husband Name | ஆறுமுகம் |
|---|---|---|---|
| Village | திட்டக்குடி | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 65 |
| | | Time | 3.50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 02.06.2026 நாளாகிய இன்று திரு..M.ஆசிப் முகமது பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**1, 2, 3 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

**1.** நான் திட்டக்குடியில் உள்ள தெற்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலைசெய்து வருகிறேன். அசா.1, அசா.2 இவர்களை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு சம்பவத்தின்போது நான் வீட்டில் இல்லை வேலைக்கு சென்றுவிட்டேன். யார் யாருக்கும் இடையே என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. போலிஸார் என்னை விசாரித்தார்களா என்றால் ? விசாரிக்கவில்லை. போலிஸார் எனக்கு சம்மன் கொடுத்ததின்பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன், மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது.

**கற்றறிந்த அரசுவழக்கறிஞர் சாட்சியை கண்ணுற்ற சாட்சி தனக்கு தெறிந்த சம்பவங்களை மறைத்து சாட்சியம் அளிப்பதால் பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்க்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ன் கீழ் குறுக்கு விசாரணை**

**1.** நான் கொத்தனார் வேலைசெய்து வருகிறேன். உள்ளூரில்வேலை செய்வது என்றால் 8.30 மணிக்கு மேல கிளம்பிபோவேன். வெளியூருக்கு வேலைக்கு சென்றால் 7.00 மணிக்கு கிளம்பிபோ–வேன். எனது வீட்டிலிருந்து அசா.1 அமரகவி என்பவரின் வீடு எனது தெருவில் கடைசியில் உள்ளது. அமரகவியை எனக்கு 5, 6 வரூடங்களாக எனக்கு தெரியும். 2 வது எதிரியான ஞானசே–கரன் அசா.1 க்கு என்ன உறவு என்று எனக்கு தெரியாது. அசா.1 அமரகவியின் வீட்டில் சண்டை நடந்தால் எனது வீடு வரை கேட்காது. அ.சா.1 க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் என்னை சண்டை என்று எனக்கு தெரியாது.

**2.** கடந்த 25–12–2020 அன்று காலை 7.30 மணியளவில் அ.சா.2 எங்கள் தெருவில் உள்ள

சரவணன் மளிகை கடையில் பால் வாங்கசென்றபோது 1 மற்றும் 2 எதிரிகள் சேர்ந்துக்கொண்டு அ.சா.1 னை அசிகங்கமாக தகாத வார்த்தைகளால் திட்டியும், 2 எதிரி ஞானசேகர் உருட்டு கட்டையால் தலையில் அடித்தார் என்றாலும், 1 எதிரியான தேவா (எ) தேவேந்திரன் அவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் அசா.2 ஐ குத்த வந்தார் என்றாலும், மூன்றாவது எதிரியான திலகவதி அசா.2 ஐ செருப்பால் அடிதாார் என்றாலும், அப்போது சம்பவத்தை பார்த்த நானும், பன்னீரும் விலக்கிவிட்டுவிட்டு போலிஸாரின் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பிறழ்சாட்சியாக மாறி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் ? சா— ியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI